தனம் மாவட்ட குற்றம் மற்றும் புலனாய்வு பிரிவு நீதிபதி அவர்கள் மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் முன்பாக

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319490

1. District : இராமநாதபுரம் மாவட்டம் PS: ஊரகக் காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 20/25 முத.தகவல் அ. எண் Date: 4-11-2025 நாள்

2. (i) Act சட்டம்: ஊரக உள்ளாட்சி அமைப்புகள் (தேர்தல் நடத்துதல்) 2018 Sections பிரிவுகள்: 76(b) ஊழல் நடவடிக்கை

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: தேர்தல் சட்டம் 2018

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 24.10.2025 நாள் முதல் 03.11.2025 நாள் வரை

Time Period : Time from : Time to : மாலை சுமார் 01.00 மணியளவில்
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 12.30 மணியளவில்

(b) Information Received at PS. Date : 04.11.2025 Time : காலை 09.30 மணிக்கு
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol - II Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலம்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 500 மீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி மாவட்ட ஆட்சியர் வளாகம், இராமநாதபுரம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : V. ராமசாமி (b) Father's/ Husband's Name : வள்ளைநாயகி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 03/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 7/700, வைரை நகர், சமத்துவபுரம் (போஸ்ட்)
தொழில் முகவரி பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ஜீவசேகரன், SDO, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேற்றியூர் பணி
திரு. நாகலிங்கம், JDO, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரியபட்டணம், இராமநாதபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : N.இராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 04.11.2025 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி V.ராமசாமி ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலக பொறியியல் பிரிவில் பணியுரியும் SDO திரு.வீரசேகரன் மற்றும் JDO நாகலிங்கம் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.20/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 04.11.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை மீரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4/11/25

4.11.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.11.2025 - 10.40 மணி

Name: பெயர் N.ராஜேஸ்வரி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .....
ஊ.த.க மாவட்டம்
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 20/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

அனுப்புநர் V.ராமசாமி, வயது 63/2025, த/பெ வெள்ளைச்சாமி,7/700, வைகை நகர், எமனேஸ்வரம் (போஸ்ட்), பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 32 வருடங்களாக முதல் நிலை ஒப்பந்ததாராராக பதிவு செய்து அரசு ஒப்பந்த வேலைகளை செய்து வருகிறேன். இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி துறையில் NH 49 முதல் பூவளத்தூர் கிராமம் வரையும், NH 49 முதல் நரியனேந்தல் கிராமம் வரையும், எஸ்.கொடிக்குளம் முதல் கருப்பணசாமி கோவில் வரையும் ரூ.1,40,00,000/- மதிப்பில் தார் ரோடு போடுவதற்கு 2025ஆம் ஆண்டு ஜீலை மாதம் Work Order பெற்றேன். மேற்படி வேலைகளை முடித்து அதற்குண்டான தொகையை விடுவிக்க வேண்டி கடந்த 24.10.2025 ஆம் தேதி காலை 12.30 மணி போல இராமநாதபுரம் ஊரக வளர்ச்சி அலுவலக பொறியியல் பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த SDO திரு.வீரசேகரன் அவர்களை நேரில் சந்தித்து நான் பார்த்த வேலைக்கான தொகையை விடுவிக்க கேட்ட போது, மேற்படி தொகையை விடுவிக்க கமிஷனாக ரூ. 1,20,000/- (1%) கொடுக்கணும் இல்லைனா லேட்டாகும் என்றும் அதை JDO நாகலிங்கத்திடம் கொடுத்துருங்க என சொன்னார். அதற்கு நான், தொழில் லாபம் இல்லாம கஷ்டப்பட்டுகிட்டு இருக்கேன் என சொன்னதற்கு அவர் எனது பில்லை பாஸ் செய்த பிறகு கொடுங்க எனச்சொன்னார். அதனைத்தொடர்ந்து வேறு அறையில் இருந்த JDO நாகலிங்கத்தை பார்த்து SDO சொன்ன விபரத்தை சொன்ன போது, அவரும் SDO சொன்னது போல் ரூ.1,20,000/- என்னிடம் வந்து கொடுத்துருங்க எனச்சொன்னார். எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லாமல் அங்கிருந்து வந்துட்டேன். பின்னர் 28.10.2025 ஆம் தேதி எனது இராமநாதபுரம் ஸ்டேட் பாங்க் அக்கவுண்ட்டில் ரூ.1,26,00,000/- (ஒரு கோடியே இருபத்தாறு இலட்சம்) ஏறியது. நேற்று 03.11.2025 ஆம் தேதி சுமார் 11.00 மணியளவில் எனது போன் நம்பருக்கு

(9442322181) JDO நாகலிங்கம் அவரது செல்போன் நம்பரில் (9994634844) இருந்து போன் செய்த போது நான் வாகனத்தில் வந்ததனால் போனை எடுக்க முடியவில்லை. பின்னர் நான் மதியம் சுமார் 01.00 மணியளவில் JDO நாகலிங்கத்திற்கு போன் செய்து விபரம் கேட்க, அதற்கு அவர், உங்களுக்கு பில் தொகை ஏறிருச்சுல, நாங்கள் கேட்ட பணம் ரூ.120000/- எப்ப கொடுப்பீங்க எனவும் நாங்க கேட்ட பணத்தை உடனே கொடுங்க இல்லைன்னா வருங்காலத்துல பில் பாஸ் ஆக ரொம்ப லேட்டாகும் பாத்துக்கங்க என சொன்னார். அதற்கு நான் வேலையா இருக்கேன் சாயங்காலம் வாரேன் எனச்சொன்னேன். என்னுடைய வேலை முடியாததால் நான் சாயங்காலம் சுமார் 05.30 மணிக்கு JDO நாகலிங்கத்திற்கு போன் செய்த போது, அவர், எங்க வந்துட்டு இருங்கீங்க என கேட்டார். அதற்கு நான் வேலை முடியல காலையில வாரேன் எனசொன்னதற்கு ரூ.120000/- பணத்தை சீக்கிரமா கொடுங்க மேலதிகாரிகள் கேட்டுக்கிட்டு இருக்காங்க எனச் சொல்லி விட்டு போனை கட் செய்தார். அதன்பின்பு யோசித்து பார்த்து நான் செய்து முடித்த அரசு வேலைக்கான தொகையை பில் போட்டு பெற்று தந்ததற்கு வெகுமதியாக என்னிடம் ரூ.120000/- லஞ்சப்பணம் கேட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலக பொறியியல் பிரிவில் பணிபுரியும் SDO திரு.வீரசேகரன் மற்றும் JDO நாகலிங்கம் ஆகியோர்கள் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் ரூ.120000/- கேட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலக பொறியியல் பிரிவில் பணிபுரியும் SDO திரு.வீரசேகரன் மற்றும் JDO நாகலிங்கம் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) V.ராமசாமி. அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 04.11.2025 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று எதிரிகளின் முன்நடத்தையை விசாரணை செய்து காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.20/2025 u/s 7 (b) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
இராமநாதபுரம்.